அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லும்பொழுது, அவ்விருவர் மட்டும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பதில் சொன்னதாகத் தோன்று கிறது. அம்மாதிரி, சபையில் இருவருக்கு மட்டும் தெரிகிற முறையில் கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் முறைதானா ? இது முன் உதாரண மாக ஆகிவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இரண்டு பேர்களுக்கு மட்டும் தெரியும் மாதிரி பேசிக்கொள்ளவில்லை. இரண்டு பேர்களும் மைக் மூலம்தான் பேசினார்கள். அவர்கள் இரண்டு பேர்கள் மட்டும் புரிந்து கொள்ளும்படி பேசவில்லை. எல்லோரும் புரிந்துகொள்கிற முறையில் தான் பேசியிருக்கிறார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) பொதுவுடைமை தீவிரவாதிகளின் (நக்சல்பாரிகள்) திடீர்தாக்குதலைச் சமாளிக்க காவல் நிலையங்களை வலுப்படுத்தல்

THIRU N. S. V. CHITHAN : Sir, under Rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance namely, the steps taken by the Government to strengthen the police stations to meet the surprise attacks by the Naxalites in the State.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1968, நவம்பர் 22, 24-ம் தேதிகளில் கேரள மாநிலத்திலுள்ள தெற்கு வயநாட்டில் தலைச்சேரி காவல்நிலையத்திலும் பூல்பள்ளி கம்பியில்லாத் தந்தி நிலையத்திலும் அம்மாநிலத்தைச் சேர்ந்த பொதுவுடைமைத் தீவிர வாதிகள் (நக்சல்பாரிகள்) தாக்குதல் நடத்தியதன் விளைவாக, நமது மாநிலத்திலுள்ள பொதுவுடைமைத் தீவிரவாதிகளின் செயல்களைக் கூர்ந்து கண்காணிக்குமாறு இம் மாநிலத்திலுள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் காவல் துறைத் தலைமை அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார். கேரள மாநிலத்தின் எல்லைப் புறமுள்ள எல்லாப் பகுதிகளிலும் படைக்கலன் தாங்கிய காவல் படையினர் அமர்த்தப்படுதல், எல்லைப்பகுதியை கூர்ந்து கண்காணித்தல் போன்ற சிறப்பான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிரவாதி கள் வன்செயல்கள் எதிலும் ஈடுபட வாய்ப்பு அளிக்காத வண்ணம் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் அடிக்கடி மூடப்படுதலும் நிலைமைக்களைச் சமாளிக்க முதல்வர்களுக்கு சுதந்திரம் அளித்தலும்

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the frequent closure of the colleges and high schools in the State of Tamil Nadu for the past few months and the need to give frtedom for the Principals to handle the situation according to the merits of each case.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்களிடையே எழும் ஒழுங்குப் பிரச்னைகளைத் தீர்க்க கல்லூரி முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. அதில் அரசு தலையிடாது.

சில வேளை மொழிக்கொள்கை போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் தரும் கொள்கைப் பிரச்சினைகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது அது கல்விக் கூடங்களுக்கு வெளியே வந்துவிடுகிறது. அப்போது நிதானத்துடனும், சிந்தனையுடனும் ஒழுங்குப் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

எத்தகைய வன்முறைச் செயல்களும் நேரிடாது தடுக்க முயற்சிகள் எடுக்க நேரிடுகின்றது. கல்லூரிகள், பள்ளிகள் மூடுவது மாணவர்களின் படிப்பையும் எதிர் காலத்தையும் மிகவும் பாதிக்கும். தவிர்க்க முடியாத